**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்**
**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்**
**சிறப்பு சார்பு நீதிமன்றம் No.I**

**முன்னிலை: திரு.எஸ்.உத்தமராஜ், பி.ஏ.,பி.எல்.,**
**சிறப்பு சார்பு நீதிபதி,**
**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்**
**சிறப்பு சார்பு நீதிமன்றம் No.I, விழுப்புரம்.**

**2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**MCOP.No.249/2016 & 250/2016 & 1/2017**
**(முதன்மை மாவட்ட நீதிமன்ற MCOP.No.508/2016 & 509/2016 & 665/2016)**

1. மேத்யூ ராபின்சன் (MCOP.249/2016-ன் மனுதாரர்)
2. ஜோஸ்லின் கிருபாகரன் (MCOP.250/2016-ன் மனுதாரர்)
3. ராஜேஷ்குமார் (MCOP.1/2017-ன் மனுதாரர்)

.. **மனுதாரர்கள்.**

//எதிர்//

1. ஜெயராஜ்
2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட்., விழுப்புரம்.

.. **எதிர்மனுதாரர்கள்.**

மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1-ஆம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.எஸ்.சுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதியாக இம்மனு என் முன்னர் 10.08.2018 அன்று விசாரணைக்கு வந்தபோது இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலணை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**பொதுத்தீர்ப்புரை**

14.042016-ஆம் தேதி ஏற்பட்ட சாலை விபத்தில் MCOP.249/2016 மனுவின் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.50,00,000/-மும், MCOP.250/2016 மனுவின் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.20,00,000/-மும், MCOP.1/2017 மனுவின் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.20,00,000/-மும், இழப்பீடு கோரி இம்மனுக்கள் மனுதாரர்களால் மோட்டார் வாகனங்கள் சட்டம் பிரிவு 166(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. MCOP.249/2016 மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மேத்யூ ராபின்சன் தமிழ்நாடு காவல்துறையில் காவலராக பணிபுரிந்து வந்தார். கடந்த 14.042016-ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் TN.32.C.2487 (Yamaha SZR) என்ற எண்கொண்ட இருச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில் மனுதாரரும் மனுதாரரின் நண்பர் ராஜேஷ்குமார் மற்றும் சகோதரர் ஜோஸ்லின்

கிருபாகரன் ஆகியோர் சகாதேவன் பேட்டையில் உள்ள HMK திருமண மண்டபத்திற்கு அருகே சாலையின் இடது ஓரமாக உரிய கவனத்துடன் வந்துக்கொண்டிருந்தபோது அச்சமயம் 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோவை 1ஆம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் பயணம் செய்துக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் மனுதாரருக்கு உடல் முழுவதும் பலவித எலும்பு முறிவும், இடுப்பின் நடுவே எலும்பு முறிவும், பலவித கொடுங்காயமும் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்பு மேல்சிகிச்சைக்காக விழுப்புரம் இ.எஸ். மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்பு சென்னை போரூர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இன்றுவரை மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்து வருகிறார். விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும்தான் காரணம். விபத்துக்குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. **MCOP.250/2016 & 1/2017 மனுக்களின் சுருக்கம்**

மேற்கண்ட அதே விபத்தில் மனுதாரர் ஜோஸ்லின் கிருபாகரன் என்பவருக்கும் மனுதாரர் ராஜேஷ்குமார் என்பவருக்கும் உடல் முழுவதும் பலவித எலும்பு முறிவும், பலவித கொடுங்காயமும் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் இம்மனுதாரர்கள் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்பு மேல்சிகிச்சைக்காக புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம். விபத்துக்குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து இழப்பீடாக முறையே ரூ.50,00,000/-, ரூ.20,00,000/-, ரூ.20,00,000/- வழங்கக் கோரியுள்ளார்கள்.

4. **MCOP.249/2016 & 250/2016 & 1/2017 வழக்குகளின் 2-ஆம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:-**

மனுக்களில் சொல்லியுள்ள அனைத்து விவரங்களையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனுவில் கூறியுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்பது மறுக்கப்படுகிறது. மனுதாரரே அதனை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். விபத்து சமயத்தில் மனுதாரர் மேத்யூ ராபின்சன் இருச்சக்கர வாகனத்தில் 2 நபர்களை ஏற்றிக்கொண்டு ஓட்டிச்சென்றதால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஆட்டோவில் மோதி விபத்து ஏற்பட்டது. எனவே இம்மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் இந்த எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டு இருந்தது என்பதும் அதன் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதும் மறுக்கப்படுகிறது. விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் காரணம் அல்ல. விபத்திற்கு மனுதாரர் மாத்யூ ராபின்சன் 2 நபர்களை ஏற்றிக்கொண்டு

அதிவேகமாகச் சென்றதே காரணம் என்பதால் மனுதாரர்களுக்கு 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. எனவே இவ்வழக்கு இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுதாரர்களின் வயது, தொழில், வருமானம், காயங்கள், சிகிச்சை மருத்துவ செலவு, ஊனம் ஆகியவற்றை மனுதாரர்கள் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவர். கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. எனவே மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5. <u>MCOP.250/2016 & 1/2017 வழக்குகளின் 2-ஆம் எதிர்மனுதாரரின் கூடுதல் எதிருரையின் சுருக்கம்:-</u>**

2ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இந்த கூடுதல் எதிருரையின் ஒரு அங்கமாக பாவிக்கவேண்டும். MCOP.249/2016 & 250/2016 வழக்குகளின் மனுதாரர்களான மேத்யூ ராபின்சன், ஜோஸ்லின் கிருபாகரன் ஆகிய இருவருக்கும் சாலை போக்குவரத்து விபத்தில் அம்பாசிடர் கார் வாகனத்தால் காயங்கள் ஏற்பட்டுள்ளது என விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் மேத்யூ ராபின்சன் TN.32.C.2487 என்ற எண்கொண்ட இருச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில் 2 நபர்களை ஏற்றிக்கொண்டு ஓட்டிச்செல்லும்போது TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோ வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர்கள் பயணம் செய்துக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை உண்மைக்கு புறம்பானவையாக இருக்கும் என சந்தேகம் தோன்றுகிறது. ஜோஸ்லின் கிருபாகரன் என்ற மனுதாரரின் மனைவி அளித்த தகவல் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை 2 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளவாறு விபத்து நடக்கவில்லை. 1ஆம் எதிர்மனுதாரர் ஆட்டோ வாகனம் விபத்திற்கு காரணம் என உட்படுத்தப்பட்டு வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது. மனுதாரர் மேத்யூ ராபின்சன் காவல் துறை அதிகாரி என்பதால் ஆட்டோ வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை பொய்யாக புனைந்து பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த விபத்தில் ஆட்டோ வாகனம் சம்மந்தப்படவில்லை. எனவே இவ்வழக்குகள் இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**6. <u>இம்மனுக்களில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>**

(1). விபத்திற்கு 1-ஆம் எதிர்மனுதாரர் / ஆட்டோ வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்பது உண்மையா?

(2). மனுதாரர்கள் இழப்பீடு பெற உரியவர்களா? இல்லையா? உரியவர்களாயின் மனுதாரர்களுக்கான இழப்பீட்டை யார் அளிக்க வேண்டும்?

(3). MCOP.No.249/2016 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

(4). MCOP.No.250/2016 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

(5). MCOP.No.1/2017 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

7. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பின் அடிப்படையில், மேற்கண்ட 3 வழக்குகளும் ஒரே விபத்து சம்மந்தப்பட்டவை என்பதால் இந்த 3 வழக்குகளையும் சரியாக பரிசீலனை செய்து தீர்வு காண மேற்படி மூன்று வழக்குகளையும் ஒன்றாக பரிசீலிப்பதுதான் சரியானது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கூட்டு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் MCOP.No.249/2016 மனுவின் மனுதாரர் திரு.மேத்யூ ராபின்சன் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.25 மற்றும் ம.சா.ஆ.38 முதல் ம.சா.ஆ.40, ம.சா.ஆ.43 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. MCOP.No.250/2016 மனுவின் மனுதாரர் திரு.ஜோஸ்லின் கிருபாகரன் ம.சா.2-ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.26 முதல் ம.சா.ஆ.33 மற்றும் ம.சா.ஆ.41 மற்றும் ம.சா.ஆ.42 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. MCOP.No.1/2017 மனுவின் மனுதாரர் திரு.ராஜேஷ்குமார் ம.சா.3-ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.34 முதல் ம.சா.ஆ.37 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் விழுப்புரம் நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஜெயபாலன் எ.ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு மருத்துவர் குழு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழ்/அறிக்கைகள் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3-ஆகக் குறியிடப்பட்டுள்ளன.

8. 1ஆம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராகியுள்ளார். 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகனங்கள் சட்டம் பிரிவு 170—ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**9. பிரச்சனை 1-க்குரிய தீர்வு**

(1). மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.1 திரு.மேத்யூ ராபின்சன், ம.சா.2 திரு.ஜோஸ்லின் கிருபாகரன் மற்றும் ம.சா.3 திரு.ராஜேஷ்குமார் ஆகியோர் மனுவில் கூறியுள்ள விபரங்களை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்கள். ம.சா.1, ம.சா.2, ம.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் கடந்த 14.04.2016-ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் மனுதாரர் மேத்யூ ராபின்சன் TN.32.C.2487 (Yamaha SZR) என்ற எண்கொண்ட இருச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தை ஓட்ட மேற்படி வாகனத்தின் பின்னால் அவருடைய நண்பர் ராஜேஷ்குமார் மற்றும் சகோதரர் ஜோஸ்லின் கிருபாகரன் ஆகியோர் உட்கார்ந்துக்கொண்டு பாண்டி-விழுப்புரம் சாலையில் சகாதேவன் பேட்டையில் உள்ள HMK திருமண மண்டபத்திற்கு அருகே சாலையின் இடது ஓரமாக வந்துக்கொண்டிருந்தபோது அச்சமயம் மனுதாரர்களுக்கு பின் திசையிலிருந்து வந்துக்கொண்டிருந்த 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோ அதிவேகமாக வந்துக்கொண்டிருந்ததாகவும், அதைப் பார்த்த அவருடைய சகோதரர் ஜோஸ்லின் தங்களது வாகனத்தை ஓரமாக நிறுத்தச்சொல்ல அவர் மேற்படி இருச்சக்கர வாகனத்தை சாலையோரம் நிறுத்தியதாகவும், அப்போது அவர்களுடைய வாகனத்தை முந்த முயன்ற TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோ வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும ஓட்டி வந்து மனுதாரர்கள் பயணம் செய்துக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்தில் மேத்யூ ராபின்சன் என்ற மனுதாரருக்கு இடது தொடை, மற்றும் இடது முழங்காலில் பலதரப்பட்ட எலும்பு முறிவும், இடது முழங்காலில் சதை கிழிசலும், உடலின் பிற பகுதிகளிலும்

பலத்த காயமும் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் மேத்யூ ராபின்சன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், பின்பு மேல்சிகிச்சைக்காக விழுப்புரம் இ.எஸ். மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், பின்பு சென்னை போரூர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், மேலும் மீண்டும் சிகிச்சை தொடரவும், காலில் ஐந்து அறுவை சிகிச்சைகள் செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தியதாகவும், அதன் பின்னர் இன்றுவரை விழுப்புரத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்து வருவதாகவும், மொத்த மருத்துவ செலவீனமாக ரூ.7,96,703/- செலவானதாகவும், Star Health Insurance வழியாக ரூ.4,00,000/-தை மருத்துவ செலவீனங்களுக்காக ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனை மூலம் பெற்றதாகவும், போக்குவரத்து செலவீனமாக ரூ.44,200/- செலவு செய்துள்ளதாகவும், விபத்தில் ஜோஸ்லின் கிருபாகரன் என்ற மனுதாரருக்கு இடது முழங்காலில் பலதரப்பட்ட எலும்பு முறிவுகளும், இடது முழங்காலில் சதை சிதைவும், தலையில் பலத்த காயமும், வலது கை ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவும், இடது காலில் பலத்த காயமும், உடலின் பிற பகுதிகளிலும் பலத்த காயமும் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், பின்பு மேல்சிகிச்சைக்காக புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், விபத்தில் ராஜேஷ்குமார் என்ற மனுதாரருக்கு இடது முழங்கை மணிக்கட்டில் எலும்பு முறிவும், உடலின் பிற பகுதிகளிலும் பலத்த காயமும் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், பின்பு விழுப்புரம் தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றும், விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும், அதிவேகமும், அஜாக்ரதையும்தான் காரணம் என்றும் எனவே 1,2 எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

(2). முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ1-ஆகக் குறியிடப்பட்டுள்ளது. விபத்து குறித்து விழுப்புரம் மாவட்டம், வளவனூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது இ.த.ச.பிரிவுகள் 279, 337-ன் கீழ் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் ம.சா.ஆ.1-ன் முன்னிலைக்கு தெரியவருகிறது. மேற்படியான ஆவணத்தில் விபத்து நடந்த தேதி 14.4.2016 என்றும், வழக்கு பதிவு செய்யப்பட்ட நாள் 16.4.2016 என்றும், விபத்து எற்படுத்திய வாகனம் TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோ வாகனம் என்றும் விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானது என்பது ம.சா.ஆ.1,2,3,4,5,21 ஆகிய ஆவணங்களைக் காணும்போது தெரியவருகிறது. விபத்திற்கு முன்பு மேத்யூ ராபின்சன் என்ற மனுதாரர் தமிழ்நாடு காவல்துறையில் திருச்சி பட்டாலியனில் பயிற்சி காவலராக பணி செய்து மாதம் ரூ.20,000/- வரை வருமானம் பெற்றதாகவும், விபத்திற்கு பின்னிட்டு முன்பு செய்த வேலைகளை செய்ய இயலவில்லை என்றும், விபத்திற்கு பின்னர் தான் பணிபுரியும்

காவல் துறையிலிருந்து எந்தவித ஊதியமும் வழங்கப்படவில்லை என்றும், பின்னிட்டு நடத்தப்பட்ட உடற்தகுதி பரிசோதனையில் தான் தேர்ச்சி பெறாததால் தான் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். விபத்திற்கு முன்பு ஜோஸ்லின் கிருபாகரன் என்ற மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.15,000/- வரை வருமானம் பெற்றதாகவும், விபத்திற்கு முன்பு ராஜேஷ்குமார் என்ற மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.15,000/- வரை வருமானம் பெற்றதாகவும், விபத்திற்கு பின்னிட்டு மனுதாரர்களால் முன்புபோல் வேலை செய்யமுடியவில்லை என்றும் மனுதாரர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை, ஆர்.சி.புத்தக நகல், ஓட்டுநர் உரிம நகல், காப்பீட்டுச் சான்றிதழ், இறுதி அறிக்கை ஆகியவற்றை பரிசீலணை செய்ததில் விபத்து ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ள ஆட்டோ வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானது என்பதும், விபத்து மேற்கண்ட வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும், விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனம் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு வாகன காப்பீடு நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதும், மேற்கண்ட ஆட்டோ வாகனத்தின் ஓட்டுநருக்கும் மனுதாரர் மேத்யூ ராபின்சனுக்கும் விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது.

(3) விபத்து சமயத்தில் மனுதாரர் மேத்யூ ராபின்சன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்ததால் அந்த மனுதாரரால் கிளச்சையும், பிரேக்கையும் சரியாக கட்டுப்படுத்த முடியாததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், மனுதாரர்கள் மருத்துவமனையில் மருத்துவரிடம் எதிரில் வந்த கார் இடித்துவிட்டதாக கூறியுள்ளார்கள் என்றும், எதிரில் வந்த அம்பாசிடர் கார் இடித்துவிட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதிரில் வந்த அடையாளம் தெரியாத அம்பாசிடர் கார் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மேத்யூ ராபின்சன் காவல் துறையில் பணிபுரிவதால் அதனைப் பயன்படுத்தி ஆட்டோ மோதியதாக தவறாகப் புகார் கொடுக்கப்பட்டு இறுதி அறிக்கையும் சாதகமாகத் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மேத்யூ ராபின்சன் காவல் துறையில் பணி செய்துக்கொண்டு 3 நபர்களாக இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்து விபத்து ஏற்பட்டுள்ளதால் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள மருத்துவ செலவு ரசீதுகள் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றும் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் மேற்கண்ட வாதத்திற்கு ஆதாரமாக மேனேஜிங் டைரக்டர், TNSTC எதிர் அப்துல் சலாம் மற்றும் பலர் (2003-2-L.W.75) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஈராயம் வழங்கியுள்ள தீர்ப்பு 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டது. இருவர் மட்டுமே பயணம் செய்யவேண்டிய இருச்சக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்தால் அதன் ஓட்டுநருக்கும், அதில் பின்னால் அமர்ந்து பயணம் செய்பவர்களும் எவ்வாறு விபத்து ஏற்படுவதற்கு காரணமாகின்றனர் என்பதை மேற்கண்ட வழக்கின் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஈராயம், இருச்சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்று விபத்தில் இறந்த நபர் 50% தற்கவனக்குறைவுக்கு பொறுப்பு என்றும், அதனால் 50% இழப்பீடு குறைக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டி கீழ்காணுமாறு தீர்ப்பளித்துள்ளது:-

" 11. We are concerned as to whether such action of the individuals is permissible under law. The motor cycle and any other two wheelers are meant only for two persons, the rider and a pillion rider. If more than two persons are travelling in a motor cycle or any other two wheeler, undoubtedly such action of the individual would become illegal and unauthorised. It is an awful sight when we come across three persons travelling in a motor cycle. They are sitting in such a cramped manner that the rider of the motor cycle almost sitting on the petrol tank or at the front edge of the seat. When he was sitting in such a position, naturally because of the restricted movement of his legs, he cannot have the complete control over the brake. The movements of his hands also so restricted. When that be so, this court is of the opinion that definitely the rider of the two wheeler cannot have full control over the vehicle.

12. Apart from that, when three persons are travelling in a motor cycle, two as pillion riders, any unusual movement of the pillion riders would make the rider of the motor cycle to loose his control over the vehicle.... "

" 13. When three persons travelled in a motor cycle which is meant for two persons, this court is of the view, the conduct of the persons who travelled in such a manner are liable for contributory negligence; especially when their action is contrary to the statute.

14. Hence we hold that the deceased was liable for 50% of the contributory negligence and consequently 50% of the compensation is deducted towards contributory negligence.... "

1ஆம் எதிர்மனுதாரர் / ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே மனுவில் கோரியுள்ளவாறு உரிய இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

(4). விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து மேத்யூ ராவின்சன் மனைவி நந்தினி என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 14.4.2016 வியாழக்கிழமை மதியம் சுமார் 03.00 மணியளவில் அவருடைய மாமியார் வீட்டிலிருந்து அவர்கள் குடியிருக்கும் பனங்குப்பம் வீட்டிற்கு அண்ணன் ஜோஸ்லின் கிருபாகரன் மற்றும் ராஜேஷ்குமார் ஆகியோருடன் அவருடைய கணவர் மேத்யூ ராபின்சன் TN.32.C.2487 என்ற எண்கொண்ட இருச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும்போது சகாதேவன் பேட்டை அருகில் உள்ள HMK திருமண மண்டபம் எதிரில் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும் அதே திசையில் ஓட்டிச்சென்ற TN.32.C.0289 என்ற எண்கொண்ட ஆட்டோவில் மோதி விபத்து ஏற்பட்டதாக புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அம்சங்களையொட்டி சாட்சியம் அளித்துள்ள மனுதாரர்கள்/ம.சா.1, ம.சா.2, ம.சா.3 ஆகயோர் விபத்து 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என்று கூறியுள்ளார்கள். விபத்து சமயத்தில் மேற்கண்ட இருச்சக்கர வாகனத்தை மனுதாரர் மேத்யூ ராபின்சன் ஓட்டிச் சென்றதாகவும், மற்ற இருவரும் அவருக்குப் பின்னால் அமர்ந்து சென்றதாகவும் மனுதாரர்களின் சாட்சியத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின்படி விபத்து ஏற்பட்ட நேரம்

14.4.2016 அன்று பிற்பகல் 3.00 மணி. விபத்து ஏற்பட்ட 30 நிமிட நேரத்தில் மனுதாரர் மேத்யூ ராபின்சனும் மற்ற இருவரும் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்பதும், அவருக்கும் மற்ற இருவருக்கும் விபத்து பதிவேடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதும் ம.சா.ஆ.22, ம.சா.ஆ.31, ம.சா.ஆ.34 ஆகிய விபத்து பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது. அவர்கள் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்தபோது எதிரில் வந்த அம்பாசிடர் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக மருத்துவரிடம் கூறப்பட்டதாக அவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விபத்து ஏற்பட்டு 47 மணி நேரத்திற்குப் பிறகு மனுதாரர் மேத்யூ ராபின்சனின் மனைவி அளித்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில், TN.32.C.0289 என்ற எண்ணுள்ள ஆட்டோ மோதியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்து, குற்ற வழக்கைப் புலன் விசாரணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஜெயபாலன் எ.ம.சா.1-ஆக 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், விபத்தில் காயப்பட்ட புகார்தாரர் தரப்பினர் டி.என்.32.சி.2487 என்ற பதிவெண் கொண்ட YAMAHA இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டது என்றும், விபத்து நடந்த அன்றே அந்த வாகனத்தில் பயணம் செய்த மூன்று நபர்களும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர் என்றும், அது தொடர்பாக 14.4.2016 அன்று மாலை 6.40 மணிக்கு விழுப்புரம் அரசு மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றும், மறுநாள் தான் அந்த மருத்துவமனைக்கு சென்று காயம் பட்ட நபர்களையும், மருத்துவரையும் விசாரித்ததாகவும், மேத்யூ ராபின்சனை விசாரித்தபோது அவர் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னதாகவும், அவரும் மற்ற இரண்டு பேரும் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது எதிரில் கார் வந்ததால் இடது பக்கமாக ஒதுங்கியபோது பின்னால் வந்த ஆட்டோ இருச்சக்கர வாகனத்தில் மோதிவிட்டதாக அவர் சொன்னதாகவும், கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாக ராஜேஷ்குமாரின் அம்மா சாந்தி என்பவர் மருத்துவமனையில் சொன்ன தகவலின் பேரில் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றும், அந்த தகவலுக்கு முரணாக மேத்யூ ராபின்சன் சொன்ன தகவல் இருந்தது என்றும், சம்பவ நடந்த இடத்திற்கு சென்று அந்த இடத்தில் ஹெச்.எம்.கே திருமண மண்டபத்திற்கு எதிரிலிருந்த செல்லப்பன், வயது 45, த/பெ. வீரப்பன், மதுரைவீரன் கோவில் தெரு, ஆலாத்தூர் என்பவரையும், அந்த மண்டபத்திற்கு பக்கத்தில் இருந்த மெத்தை விற்பனை கடையில் வேலை செய்யும் முஸ்தபா, வயது 23, த/பெ. குருபாஷா என்பவரையும் விசாரித்ததில் கார் ஓட்டுநர்மீது தவறு இல்லை என்றும், ஆட்டோ இருச்சக்கர வாகனத்தின் பக்கவாட்டில் வந்து அதில் பயணம் செய்த மூன்று நபர்களின் கால்மீதும் மோதியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அவர்கள் சொன்னதாகவும், அதிலிருந்துதான் இந்த விபத்து ஆட்டோவினால் ஏற்பட்டது என்று தெரிய வந்தது என்றும், புகாரை பதிவு செய்த பிறகுதான் தான் சம்பவ இடம் சென்று விசாரித்தாகவும், மருத்துவமனையில் விசாரித்தபிறகு புகார் பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக தான் சம்பவ இடம் சென்று மேற்சொன்ன இரு நபர்களிடமும் வாய்மொழியாக விசாரித்தபோது அவர்கள் ஆட்டோ ஓட்டுநர் மோதியதாக சொன்னதாகவும், அன்றைய தினம் அவர்களிடம் தான் வாக்குமூலம் எதுவும் பெற்று பதிவு செய்யவில்லை என்றும், கிழக்கிலிருந்து மேற்கே இருச்சக்கர வாகனத்தில் சென்றவர்கள் அதே திசையில் சென்ற ஆட்டோவில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக புகாரை அளித்தவர்

சொன்னதாகவும் கூறியுள்ளார். மனுதாரர்கள் சென்ற அதே திசையில் 1ஆம் எதிர்மனுதாரர் அவருடைய ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும் ஓட்டிச்சென்று மனுதாரர்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதியதாக எ.ம.சா.1 இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார் என்பது ம.சா.ஆ.21 இறுதி அறிக்கை நகலிலிருந்து தெரியவருகிறது.

(5). 1ஆம் எதிர்மனுதாரர் வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.4ஆகக் குறியிடப்பட்டுள்ளது. வலது பக்க பின் கதவு மற்றும் பின் பகுதி மூலை உள்பக்கமாக அழுந்தி இருந்ததாகவும், வலது பக்க பின் விளக்கு உடைந்து இருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் மேத்யூ ராபின்சனின் இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.6ஆகக் குறியிடப்பட்டுள்ளது. இடது முகப்பு உடைந்து காணப்பட்டதாகவும் உறாண்டில் பாரும் இடது பக்க கியர் ஷிப்ட் லிவரும் வளைந்து காணப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேத்யூ ராபின்சன் மற்றும் ஜோஸ்லின் கிருபாகரன் ஆகிய இரு மனுதாரர்களுக்கு இடது காலிலும், ராஜேஷ்குமார் என்ற மனுதாரருக்கு இடது கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது சிகிச்சை ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது. எதிரில் வந்த கார் வாகனம் மனுதாரர்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதியிருந்தால் இருச்சக்கர வாகனத்தின் வலது புறத்தில் சேதமும், மனுதாரர்களுக்கு உடலின் வலது புறத்தில் கொடுங்காயங்களும் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் அத்தகைய சேதமோ, காயங்களோ காணப்படவில்லை. மேற்கண்டப் பொருண்மைகளிலிருந்து, இந்த விபத்தானது எதிரில் வந்த அம்பாசிடர் கார் மோதியதால் ஏற்பட்டதல்ல என்பதையும், ஆட்டோவும் இருச்சக்கர வாகனமும் மோதிக்கொண்டு விபத்து ஏற்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன. மனுதாரர் மேத்யூ ராபின்சனுக்கு இடது காலின் இரு எலும்புகள், இடது தொடை எலும்பு மற்றும் இடுப்புக்கூட்டெலும்பில் முறிவுகள் ஏற்பட்டுள்ளது. அவர் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவர். அந்த வாகனத்தின் பின்னால் தான் அமர்ந்து சென்றதாகவும் நடுவில் மனுதாரர் ஜோஸ்லின் கிருபாகரன் அமர்ந்து வந்ததாகவும் ம.சா.3 திரு.ராஜேஷ்குமார் கூறியுள்ளார். விபத்து நடந்த மறுநாள் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்குச் சென்று மனுதாரர் மேத்யூ ராபின்சனை விசாரித்தபோது, மனுதாரர்கள் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது எதிரில் கார் வந்ததால் இடது பக்கமாக ஒதுங்கியபோது பின்னால் வந்த ஆட்டோ இருச்சக்கர வாகனத்தில் மோதிவிட்டதாக அவர் தன்னிடம் கூறியதாக எ.ம.சா.1 கூறியுள்ளார். மனுதாரர்களுக்குப் பின்னால் வந்த ஆட்டோ ஓட்டுநரும் எதிரில் கார் வருவதைக் கவனிக்காமல் கடந்து விடலாம் என வேகமாக உரிய இடைவெளி இல்லாமல் வந்துவிட்டு மனுதாரர்களைக் கடக்கும்போது எதிரில் கார் வருவதைப் பார்த்துவிட்டு அவரும் ஆட்டோவை இடது பக்கமாகத் திருப்பி இருந்தாலோ அல்லது ப்ரேக் அடித்திருந்தாலோ ஆட்டோ இருச்சக்கர வாகனத்தின் மீது மோதியோ அல்லது ஆட்டோவின் மீது இருச்சக்கர வாகனம் மோதியோ மேற்கண்டவாறு அதாவது எ.ம.சா.1-றிடம் மனுதாரர் மேத்யூ ராபின்சன் கூறியவாறு விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை, மேற்கண்ட வாகன சேதங்களும் மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களும் உறுதிப்படுத்துவனவாக உள்ளன. விபத்தை நேரில் கண்ட சம்பவ இடத்தின் இரு சாட்சிகளை முதல் தகவல் அறிக்கையை பதியும் முன்பும், பதிந்த பிறகும் எ.ம.சா.1 விசாரித்து இந்த விபத்து குறித்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார் என்பது அவருடைய சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. அந்த இரு சாட்சிகளின் பெயர், விவரங்களை எ.ம.சா.1 தனது

சாட்சியத்தில் கூறியுள்ளார். இந்த விபத்தில் ஆட்டோவுக்கு தொடர்பில்லையெனில், மேற்கண்ட இரு சாட்சிகளை அழைத்து விசாரிக்க 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் அத்தகைய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. மேலும் மேற்கண்டச் சூழ்நிலையில் விபத்து வேறு எவ்வாறு நடந்தது என்பது குறித்து அறியவைக்கும் விதமாக 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரோ அல்லது வேறு 3ஆம் தரப்பு தனிநபர் சாட்சிகள் எவருமோ 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபத்திற்கு காரணமான வாகனத்தின் ஓட்டுநரை விசாரிக்காத நிலையில், அந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்று அனுமானம் கொள்ளலாம் என்பதனை

K.K.Jain & 7 others /vs/ Masroor Anwar & others 1990 ACJ 299

வழக்கில் மாண்புமிகு மத்தியபிரதேச உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. முதல் தகவல் அறிக்கையும் 1ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், விபத்து சமயத்தில் மனுதாரர்கள் சட்டத்திற்குப் புறம்பாக மூவராக இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்துள்ளனர். மூவர் பயணம் செய்யும்போது ஓட்டுநராலும், அதில் அமர்ந்து செல்பவர்களாலும் விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகள் குறித்து மேற்கண்ட அப்துல் சலாம் வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதோடு இருச்சக்கர வாகனத்தில் மூவரில் ஒருவராக பின்னால் அமர்ந்து சென்று காயமடைந்து இறந்த நபரின் 50% தற்கவனமின்மையும் விபத்துக்குக் காரணம் என தீர்ப்பளித்துள்ளதையும் மேலே கண்டோம். எனவே மேற்சொன்ன காரணங்களால் மேற்கண்டச் சூழ்நிலையில் 1ஆம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர்களின் சரிசம கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இப்பிரச்சனைக்கு அவ்வாறே தீர்வு காணப்படுகிறது.

**10. <u>பிரச்சனை 2-க்குரிய தீர்வு</u>**

பிரச்சனை-1-ற்கு, 1ஆம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர்களின் சரிசம கவனக்குறைவு விபத்திற்கு காரணம் என்று தீர்வு கண்டிருப்பதால் மனுதாரர்கள் இழப்பீடு பெற அருகதையுடையவர்கள். மேற்படி 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் 2ஆம் எதிர்மனுதாரர் என்பதால், பகரப்பொறுப்பாக மனுதாரர்களுக்கான 50% இழப்பீட்டை, 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ வழங்க வேண்டுமென்றும், மனுதாரர்களின் தற்கவனக்குறைவின் அளவுக்கு மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை 2-க்கு தீர்வளிக்கப்படுகிறது.

**11. <u>பிரச்சனை 3-க்குரிய தீர்வு</u>**

MCOP.No.249/2016 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

இம்மனுவின் மனுதாரர் திரு.மேத்யூ ராபின்சன் விபத்து காயத்திற்காக தனக்கு ரூ.50,00,000/- இழப்பீடாக வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

(2). மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.4.2016 தேதி முதல் 16.4.2016 வரை சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்குச் சென்றபோது மனுதாரருக்கு இடது காலில் ரத்த ஒழுகலுடன் கூடிய 10x5x2 செ.மீ. அளவில் கிழிந்த காயமும், இடது தோள்பட்டை பகுதியில் 3x2 செ.மீ. அளவில் கன்றிய காயமும் காணப்பட்டுள்ளது என்பதும், இடது

காலின் இரு எலும்புகளிலும் கீழ் 3ஆம் பகுதியிலும், இடது தொடை எலும்பில் கீழ் 3ஆம் பகுதியிலும் முறிவு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது என்பதும், இடது தோள்பட்டை பகுதியில் காணப்பட்ட காயம் சொற்ப காயம் என்றும், இடது காலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.22 விபத்து பதிவேடு ஆவணத்திலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் விழுப்புரம் இ.எஸ். மருத்துவமனையில் 16.4.2016 தேதி முதல் 20.4.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், இடது காலில் மேற்கண்ட இரு எலும்பு முறிவுகள் மற்றும் கிழிந்த காயங்கள் தவிர இடது இடுப்பு மூட்டில் தொடை எலும்பு இணையும் பகுதியில் பலவித வளைவுகள் கொண்ட முறிவும் கண்டறியப்பட்டு இடது தொடை எலும்பிலும், இடது முழங்காலில் திபியா எலும்பிலும் ராடு பொறுத்தி 16.4.2016 தேதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும், இடுப்பெலும்பு முறிவிற்கு உட்கருவி பொருத்த உயர் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் ம.சா.ஆ.8 விடுவிப்புச் சான்றிலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் 20.4.2016 தேதி முதல் 26.5.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், அங்கு அவருக்கு 25.4.2016 தேதியில் இடது இடுப்பு மூட்டில் உட்கருவி பொருத்தியும், இடது முழங்காலின் திபியா எலும்புக்காயம் தொடர்பாக சீர்செய்தும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும், 27.4.2016 தேதியில் ஒட்டுத்தோல் அறுவை சிகிச்சையும், 4.5.2016 தேதியில் இடது இடுப்பில் அறுவை சிகிச்சை செய்து காயம் மூடப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.9 விடுவிப்புச் சான்றிலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் 28.10.2016 தேதி முதல் 21.11.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், மனுதாரருக்கு இடது இடுப்பில் எலும்புத்திசுக்கள் உருவான அமைப்பால் வலி ஏற்படுவதும், திபியா எலும்பின் கூடாமையும் கண்டறியப்பட்டு, 1.11.2016 அன்று இலியாக் எலும்பிலிருந்து எலும்பு அறுவடை செய்து திபியா எலும்பில் எலும்பு ஒட்டு அறுவை சிகிச்சையும், இடது இடுப்பு தொந்தரவுக்கு நீட்டல் சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.10 விடுவிப்புச் சான்றிலிருந்து தெரியவருகிறது. உடல் தகுதி தொடர்பாக மருத்துவ குழு முன்பு ஆஜராக மனுதாரருக்கு அளிக்கப்பட்ட கடிதம் ம.சா.ஆ.20-ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட 30.3.2017 தேதியிட்ட மனுதாரரின் உடற்தகுதி சான்றிதழ் ம.சா.ஆ.23-ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இடது இடுப்பில் வலியும் இறுக்கமும் (arthritis) காணப்பட்டதாகவும், இடது தொடை மற்றும் முழங்கால் எலும்புகள் கூடி வருவதாகவும் அதிகமாக நடக்கவோ, ஓடவோ இயலாது என்பதால் உட்கார்ந்த நிலையில் பணி செய்ய அறிவுறுத்தலாம் என்றும் ம.சா.ஆ.23-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(3)** தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380/15/2016(1) TN MAC 609) வழக்கில் மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைப் பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோலின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரைப் பரிசோதித்து நீ.ம.சா.ஆ.1 ஊனச் சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரருக்கு நுண்கதிர் படம் எடுத்துப் பார்த்ததில் இடது தொடை எலும்பு மற்றும் இடது

இடுப்பு இணைப்பில் எலும்பு கூடியுள்ளதாகவும், இடது கால் எலும்பு முறிவு கூடாமல் இருப்பதாகவும், மனுதாரரைப் பரிசோதித்ததில், இடது இடுப்பில் நெகிழ்வு திறன் 60 டிகிரி வரையும், இடது கணுக்காலில் நெகிழ்வு திறன் 90 டிகிரி வரை வலியுடனும் இருப்பதாகவும், குத்தங்காலிட்டு அமர இயலவில்லை என்றும், இடது பாதத்தை உயர்த்துவதில் இயலாமை காணப்படுவதாகவும், படி ஏறவோ இறங்கவோ இயலவில்லை என்றும், விபத்துக்காயங்களால் இடது இடுப்பு, கணுக்கால் ஆகியவற்றின் இறுக்கம் மற்றும் பாதத்தை உயர்த்த இயலாமை ஆகியவற்றின் விளைவாக மொத்தம் 50% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 50% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

(4). மனுதாரர் காவலர் பணியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார் என்றும், மனுதாரருக்கு 50% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதால் அவரின் பொருள் ஈட்டும் திறன் பாதிப்படைந்துள்ளது என்றும், எனவே மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தை அவரின் எதிர்கால வருமான இழப்பை கணக்கில்கொண்டு இழப்பீடு கணக்கிடவேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. மனுதாரர் அரசு பணியிலிருந்து நீக்கப்படவில்லை என்றும், காவலர் பயிற்சியிலிருந்து மட்டுமே நீக்கப்பட்டுள்ளார் என்றும், அதுவும் சொந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் பயிற்சி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும், மனுதாரருக்கு அமர்ந்த நிலையில் செய்யக்கூடிய பணியை செய்ய அறிவுறுத்தலாம் என மருத்துவக்குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இடுப்பில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான எலும்பு வளர்ச்சியால் மனுதாரரின் நிலை மேலும் மோசமாகி இடது பாதத்தை தூக்க முடியாத நிலை ஏற்பட்டதால்தான் மனுதாரர் காவலர் பணியை தொடரவில்லை என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(5). இவ்வழக்கில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 50% நிரந்தர ஊனம் என்று மருத்துவர் குழு குறிப்பிட்டிருந்தாலும் இனிமேற்கொண்டு மனுதாரரால் வேலை செய்து சம்பாதித்து பொருள் ஈட்டும் திறன் பாதிப்பு அடைந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளதால் அவருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள எதிர்கால வருமான இழப்பின் அளவை வைத்து அவரின் இழப்பீட்டை கணக்கிடுவதுதான் சரியான முறையாக இருக்கும். இதனை

RajKumar //vs// Ajaykumar 2011 ACJ(1) வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதோடு அதற்கான வழிமுறைகளையும் கீழ்காணுமாறு சுட்டிக்காட்டியுள்ளது:-

" 10. Ascertainment of the effect of the permanent disability on the actual earning capacity involves three steps.

The tribunal has to first ascertain what activities the claimant could Carry on in spite of the permanent disability and what he could not do as a result of the permanent disability. (this is also relevant for awarding compensation under the head of loss of amenities of life).

The second step is to ascertain his avocation profession and nature of work before the accident as also his age.

The third step is to find out whether

i) the claimant is totally disabled from earning any kind of livelihood, or

ii) whether in spite of the permanent disability, the claimant could still effectively carry on the activities and functions, which he was earlier carrying on or
iii) whether he was prevented or restricted from discharging his previous activities and functions, but could carry on some other or lesser scale of activities and functions so that he continues to earn or can continue to earn his livelihood. "

மனுதாரருடைய மார்ச் 2016-க்கான சம்பளப்படியல் நகல் ம.சா.ஆ.19-ஆகக் குறியிடப்பட்டுள்ளது. அதிலிருந்து விபத்து சமயத்தில் மனுதாரரின் மாதச் சம்பளம் ரூ.15,939/- எனத் தெரியவருகிறது. விபத்து சமயத்தில் மனுதாரர் நிரந்தர அரசு பணி செய்பவராகவும், 40 வயதுக்கு குறைவானவராகவும் இருந்துள்ளார் என்பதால் நேஷ்னல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் ப்ரணாய் சேத்தி மற்றும் பலர் {2018 SAR (Civil) 81} வழக்கின் மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பு நெறியின்படி 50% எதிர்கால வருமான உயர்வு மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது. எனவே மனுதாரரின் மொத்த மாத வருமானம் ரூ.23,910/- எனத் தீர்மானிக்கப்படுகிறது.

(6). மனுதாரருக்கான இரண்டாம் நிலை ஆண் காவலர் பணிக்கான நியமன ஆணை ம.சா.ஆ.18ஆகக் குறியிடப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி, மனுதாரர் 6 மாதகாலம் பயிற்சிப் பள்ளியில் உறைவிடப் பயிற்சி மற்றும் ஒரு மாத காலம் நடைமுறைப்பயிற்சி என மொத்தம் 7 மாத காலம் அடிப்படைப் பயிற்சி பெற வேண்டும். மனுதாரர் 26.2.2016 அன்று மேற்கண்ட பயிற்சிக்கு சேர்ந்துள்ளார் என்பதும், விபத்திற்குப் பிறகு அரசு மருத்துவக்குழு அளித்த சான்று மற்றும் மனுதாரரின் 11.7.2018 தேதியிட்ட விண்ணப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரரை இரண்டாம் நிலை காவலர் அடிப்படைப் பயிற்சியிலிருந்து நீக்கம் செய்து 12.7.2018 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.43 ஆணை நகலிலிருந்து தெரியவருகிறது. விபத்தின் காரணமாக தான் தொடர்ந்து இரண்டாம் நிலை காவலர் அடிப்படைப் பயிற்சியினை மேற்கொள்ள இயலாத காரணத்தால், தன்னை காவலர் அடிப்படை பயிற்சியிலிருந்து நீக்கம் செய்யும் படியும், அசல் சான்றிதழ்கள் அனைத்தையும் திரும்ப வழங்குமாறும் கோரி மனுதாரர் மனு அளித்துள்ளார் என்பது ம.சா.ஆ.43 ஆணையிலிருந்து தெரியவருகிறது. தொடர் சிகிச்சைக்குப் பிறகும் விபத்தில் ஏற்பட்ட காயங்களின் பாதிப்பிலிருந்து விடுபட முடியாததால்தான் மனுதாரர் மேற்கண்டவாறு மனு அளித்துள்ளார் என்பதற்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிகிச்சை தொடர்பான ஆவணங்களும் மருத்துவர் குழு அறிக்கையும் சான்றாக உள்ளன. மேற்கண்டச் சூழ்நிலையில் மனுதாரரின் கோரிக்கையை தவறான ஒன்றாகக் கருத இயலாது. மனுதாரரை இரண்டாம் நிலை காவலர் பணியிலிருந்து நீக்கிவிட்டதாக ம.சா.ஆ.43 ஆணையில் குறிப்பிடப்படவில்லை. எனினும் இரண்டாம் நிலை காவலர் பணிக்கான பணி நியமன ஆணை பெற்ற நபர், அந்த பணிக்கான அடிப்படைப் பயிற்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பிறகு அந்தப் பணியை தொடர்வதற்கான அடிப்படைத் தகுதியை இழந்து விடுகிறார். எனவே மனுதாரரைப் பணியிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்து இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என கருத்தில் கொண்டாலும், மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள நிரந்தர ஊனத்தின் காரணமாக மனுதாரர் இரண்டாம் நிலை காவலர் பணிக்கான அடிப்படைப் பயிற்சியை தொடர முடியாத நிலையில் உள்ளார். மேலும் நியமனம் செய்யப்பட்ட இரண்டாம் நிலை காவலருக்கான அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்யாத மனுதாரருக்கு, அமர்ந்து செய்யும்படியான

அரசப் பணி ஏதேனும் வழங்கப்படுமா என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. எனினும், மனுதாரர் அமர்ந்த நிலையில் செய்யக்கூடிய பணியை செய்யக்கூடியவராக இருக்கிறார் என்பது மருத்துவக்குழு அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. எனவே அரசப் பணியிலிருந்து மனுதாரர் நீக்கம் செய்யப்பட்டாலும், அமர்ந்து செய்யக்கூடிய பணி எதையாவது செய்து குறைந்த அளவிற்காவது வருமானம் ஈட்டக்கூடிய வாய்ப்பு உள்ளது. மேலும் கருணை அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்றவாறு மாற்றுப் பணி ஏதாகிலும் அரசால் வழங்கப்பட்டாலும், அது மனுதாரர் செய்து வந்த இரண்டாம் நிலை காவலருக்கு இணையான சம்பளம் உள்ள பதவியாக இருக்க வாய்ப்பு உள்ளது எனக் கருத இயலவில்லை. எனவே மேற்கண்டப் பொருண்மைகளைக் கருத்தில் கொண்டு மனுதாரருக்கு 75% வருமானம் ஈட்டும் திறன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**12. <u>நிரந்தர ஊனத்தினால் ஏற்பட்ட எதிர்கால வருமான இழப்பு:-</u>**

மனுவில் மனுதாரருடைய வயது 23 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 ஓட்டுநர் உரிமத்திலும், ம.சா.ஆ.16 ஆதார் அட்டையிலும் மனுதாரருடைய பிறந்த தேதி 10.6.1991 என குறிப்பிடப்பட்டுள்ளதால் வயது பற்றி தீர்மானிக்க அவற்றையே அடிப்படையாக வைத்து விபத்து சமயத்தில் மனுதாரரின் பூர்த்தியான வயது 24 என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, சரளா வர்மா எதிர் D.T.C மற்றும் ஒருவர் (CDJ 2009 SC 779) வழக்கில் மாண்பு மிகு உச்ச நீதிமன்றம் சுட்டிகாட்டியுள்ளபடி, 24 வயதிற்கான பெருக்கல் குறியீட்டு எண்.18-ஐ இழப்பீட்டை கணக்கிட இந்நீதிமன்றம் எடுத்துக்கொள்கிறது. அதன்படி, மேற்கண்ட ராஜ்குமார் வழக்கில் சுட்டிக்காட்டியுள்ள 'அ' எடுத்துக்காட்டின்படி கணக்கிட்டால் (23,910x12x75/100=2,15,190x18)=Rs.38,73,420/- வருகிறது. எனவே, மனுதாரருக்கு நிரந்தர ஊனம் மற்றும் எதிர்கால வருமான இழப்பிற்காக Rs.38,73,420/- கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எதிர்கால வருமான உயர்வையும் சேர்த்துக் கணக்கிடும்போது 75% மொத்த மாத வருமானம் மனுதாரரின் தற்போதைய மாத வருமானத்திற்கும் அதிகமாக உள்ளதால் சிகிச்சை கால வருமான இழப்புக்கென தனியாக இழப்பீடு கணக்கிடப்படவில்லை.

13. <u>மனவலி மற்றும் வேதனைக்காக</u>:-

விபத்தில் மனுதாரருக்கு இடது கால் தொடையிலும், முழங்காலிலும் மற்றும் இடுப்பிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு 68 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துள்ளார். 6 முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 50% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் ரூ.2,00,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**14. <u>ஊட்டச்சத்து:-</u>**

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகப்படியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.20,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**15. <u>ஆடை சேத மதிப்பு:-</u>**

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக

ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

16. **போக்குவரத்து:-**

விபத்து ஏற்பட்ட பிறகு மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கும் DGP அலுவலகம் மற்றும் பயிற்சி மையத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டதற்கு ரூ.44,200/- செலவானதாக 10 டிரிப் ஷீட்டுகள் ம.சா.ஆ.14ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே போக்குவரத்து செலவு பில்லுக்கான தொகையாக ரூ.44,200/- மட்டும் மனுதாரர் பெற உரியவர் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

17. **மருத்துவ பில்கள்:-**

மனுதாரர் விழுப்புரம் இ.எஸ். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ரூ.79,202/- செலவானதாக மருத்துவ ரசீதுகள் மனுதாரரால் ம.சா.ஆ.11ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ரூ.1,73,023/- செலவானதாக மருத்துவ ரசீதுகள் மனுதாரரால் ம.சா.ஆ.12ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ரூ.1,42,668/- செலவானதாக மருத்துவ ரசீதுகள் மனுதாரரால் ம.சா.ஆ.13ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.13-ல் உள்ள பில்களில் வரிசை எண் 1-ல் உள்ள ரூ.750/-க்கான சர்ஜிகல் கேஸ் பில்லின் தேதி 14.5.2016. அந்த தேதியை உள்ளடக்கிய ம.சா.ஆ.12 கன்சாலிடேடட் பில்லில் சர்ஜிகல் பார்மசி கேஷ் கணக்கும் அடங்கியுள்ளது. ம.சா.ஆ.13-ல் வரிசை எண் 25 மற்றும் 26 பில்களின் தொகை முறையே ரூ.137/- மற்றும் ரூ50/- என கணக்குப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிற்கான பில்களில் தொகை உட்பட எந்த விவரமும் தெரியவில்லை. வரிசை எண் 32-ல் உள்ள ரூ.1,03,023/-க்கான 26.5.2016 தேதியிட்ட பில் தொகை ஏற்கெனவே ம.சா.ஆ.12 பில்லில் கணக்கில் காட்டப்பட்ட தொகையாகும். வரிசை எண்.38-ல் உள்ள 31.10.2016 தேதியிட்ட ரூ.5,000/-க்கான " on account " பில் மனுதாரரின் கணக்கில் கட்டப்பட்ட தொகைதானேயொழிய செலவுக்கான ஆதாரம் அல்ல. எனவே மேற்கண்ட தொகைகள் சேர்த்து வரும் ரூ.1,08,960/- போக மருத்துவ செலவு பில்லுக்கான தொகையாக ரூ.2,85,933/- மட்டும் மனுதாரர் பெற உரியவர் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

18. **உதவியாளர் ஊதியம்:-**

மனுதாரர் சிகிச்சை பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.30,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

19. **வாழ்க்கை எதிர்பார்ப்பு இழப்பு மற்றும் எதிர்கால சிகிச்சை செலவு :-**

இடது தொடை எலும்பில் பொறுத்தப்பட்டுள்ள உட்கருவியை அகற்றவும், இடது கணுக்காலின் குறைபாட்டை சரிசெய்யவும் அறுவை சிகிச்சை உள்ளிட்ட செலவுகளுக்கு தோராயமாக ரூ.2,00,000/- செலவாகும் என, மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்ட சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவர் வழங்கியுள்ள 4.2.2017 தேதியிட்ட கடிதம் ம.சா.ஆ.24-ஆகக் குறியிடப்பட்டுள்ளது. இடது திபியா எலும்பில் ஒட்டு எலும்பு ஒட்டு அறுவை சிகிச்சை செய்யவும், இடது பாத வீழ்ச்சியை சரிசெய்யவும், இடது இடுப்பை முழுமையாக மாற்றி அமைக்கவும் அறுவை சிகிச்சை உள்ளிட்ட செலவுகளுக்காக தோராயமாக ரூ.5,00,000/- செலவாகும் என அதே

மருத்துவமனையின் மருத்துவர் அளித்துள்ள 16.12.2017 தேதியிட்ட கடிதம் ம.சா.ஆ.40ஆகக் குறியிடப்பட்டுள்ளது. காவலராகப் பணிபுரிய வேண்டும் என்ற மனுதாரரின் எதிர்பார்ப்பு இந்த விபத்தால் இழக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டப் பொருண்மைகளைக் கருத்திற்கொண்டு வாழ்க்கை எதிர்பார்ப்பு இழப்பு மற்றும் எதிர்கால சிகிச்சை செலவுக்கென ரூ.4,00,000/- வழங்குவது ஏற்புடையதாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிரந்தர ஊனத்தால் ஏற்பட்ட எதிர்கால வருமான இழப்பிற்காக | ரூ.38,73,420/- |
| மனவலி மற்றும் வேதனைக்காக | ரூ. 2,00,000/- |
| ஊட்டச்சத்து | ரூ. 20,000/- |
| மருத்துவச்செலவு | ரூ. 2,85,933/- |
| வாழ்க்கை எதிர்பார்ப்பு இழப்பு மற்றும் எதிர்கால சிகிச்சை செலவுக்கு | ரூ. 4,00,000/- |
| ஆடை சேத மதிப்பு | ரூ. 1,000/- |
| போக்குவரத்து | ரூ. 44,200/- |
| உதவியாளர் ஊதியம் | ரூ. 30,000/- |
| மொத்தம் | ரூ.48,54,553/- |

விபத்திற்கு மனுதாரர்களின் 50% தற்கவனக்குறைவும் காரணம் என்பதால் மேற்கண்ட தொகையில் 50% மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரருக்கு மொத்தம் ரூ.24,27,500/- (Rs.24,27,277/- Rounded off ) (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) ஒட்டுமொத்த இழப்பீடாகக் கிடைக்கத்தக்கது என பிரச்சனை 3-க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒட்டுமொத்த இழப்பீடாக மொத்தம் ரூ.24,27,500--(ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்)-மும் அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை வருடத்திற்கு 7.5% வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் விழுப்புரம் SBI வங்கியின் ADB கிளையில் (வங்கி IFS Code No. SBIN0003065 SWIFT) உள்ள, இந்நீதிமன்ற வங்கிக் கணக்கில் (A/C. No.36068985153) நேரடி வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என்றும், இழப்பீட்டுத் தொகையை செலுத்திய உடன் மனுதாரருக்கு/ மனுதாரர் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு உரிய ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் வரையில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், மனுதாரர் மனு தாக்கல் செய்து அதில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில், நேரடியாக மனுதாரருடைய வங்கி கணக்கு மூலமாக NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில்

பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் செலுத்திய நீதிமன்ற கட்டணம் போக இழப்பீடு தொகைக்குரிய குறைவு நீதிமன்றக் கட்டணத்தை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் 15 நாட்கள் முடிவடைந்த தேதியிலிருந்து நீதிமன்றக் கட்டணம் முழுவதையும் செலுத்தும் தேதி வரை இழப்பீட்டு தொகைக்கு மனுதாரர் வட்டி பெறத் தக்கவர் அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்குரைஞர் ஊதியம் ரூ.41,775/-.

**மனுதாரரின் வங்கி கணக்கு விவரங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரியுடன் | : | திரு.மேத்யூ ராபின்சன் த/பெ.சைலஸ், 280ஏ, மேற்கு பாண்டி ரோடு, வளவனூர், விழுப்புரம். |
| 2. | வங்கி மற்றும் வங்கி கிளையின் பெயர் | : | State Bank of India, Villupuram |
| 3. | மனுதாரரின் வங்கி கணக்கு எண் | : | 20216009715 |

மனுதாரருடைய வருமான வரி நிரந்தர கணக்கு எண் விவரங்களை மனுதாரர் இது நாள் வரை தாக்கல் செய்யாததால் அவற்றை உடனடியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**20. பிரச்சனை 4-க்குரிய தீர்வு**

MCOP.No.250/2016 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

இம்மனுவின் மனுதாரரான திரு.ஜோஸ்லின் கிருபாகரன் விபத்து காயத்திற்காக தனக்கு ரூ.20,00,000/- இழப்பீடாக வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

(2). மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.4.2016 தேதியில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்குச் சென்றபோது மனுதாரருக்கு தலையின் இடது பக்கவாட்டுப் பகுதியில் 2x0.5x0.5 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயமும், இடது காலில் ரத்த ஒழுகலுடன் 3x2x0.5 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயமும், இடது பாதத்தில் மாறுபாடான நிலையும் காணப்பட்டுள்ளது என்பதும், இடது பாதத்தில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், மற்ற இரு காயங்களும் சொற்ப காயம் எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.31 விபத்து பதிவேடு ஆவணத்திலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.4.2016 தேதி முதல் 22.4.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், மனுதாரருக்கு இடது பாதத்தின் மேல்பகுதியில் உள்ள டாலஸ் எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.26 விடுவிப்புச்சான்றிலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் பாண்டிச்சேரி ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 23.4.2016 தேதி முதல் 7.6.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், 29.4.2016 தேதியில் 6 திருகாணிகள் பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள விபரமும் ம.சா.ஆ.30 நுண்கதிர்படங்கள் மற்றும் ம.சா.ஆ.27 விடுவிப்புச்சான்றிலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் அதே மருத்துவமனையில் 9.11.2016 தேதி முதல் 15.11.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், 11.11.2016 தேதியில் 4 திருகாணிகளை அகற்றி

அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள விபரமும் நுண்கதிர் படங்கள் மற்றும் ம.சா.ஆ.28 விடுவிப்புச்சான்றிலிருந்து தெரியவருகிறது.

**(3).** தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380/15/2016(1) TN MAC 609) வழக்கில் மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைப் பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோலின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரைப் பரிசோதித்து நீ.ம.சா.ஆ.2 ஊனச் சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களின் விளைவாக மொத்தம் 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

**21. <u>ஊனத்திற்கான இழப்பீடு :-</u>**

தற்போதைய வாழ்க்கைச் செலவின அடிப்படையில் 1 சதவிகித ஊனத்திற்கு ரூ.3000/- என நிர்ணயம் செய்வதே மிகவும் ஏற்க்கதக்க ஒன்றாக இருக்கும் என நேசனல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் **ஜி.ரமேஷ் மற்றும் ஒருவர்** (2013 (2) TN MAC 583) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே மனுதாரருக்கு 2016 ஆம் ஆண்டில் 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரரின் காயங்கள் மற்றும் ஊனம், வயது ஆகியவற்றை கணக்கில்கொண்டு ஊனத்திற்கான இழப்பீட்டு தொகையை 1 சதவிகிதத்திற்கு ரூ.4,000/- என வழங்குவது சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானித்து 15x4,000=ரூ.60,000/- மனுதாரருக்கு நிரந்தர ஊனத்திற்காக கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**22. <u>மனவலி மற்றும் வேதனைக்காக</u>:-**

மனுதாரருக்கு விபத்தில் இடது காலிலும், தலையிலும் கிழிந்த காயமும், இடது பாதத்தில் டாலஸ் எலும்பில் முறிவும் ஏற்பட்டு 60 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துள்ளார். இருமுறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 15% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் ரூ.35,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**23. <u>வருமான இழப்பு</u>**

மனுதாரர் தனது சாட்சியத்தில் விபத்திற்கு முன்பு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் <u>ரூ.15,000/</u>- வரை சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார். விபத்திற்கு பின்பு முன்போல் எந்த வேலையும் செய்யமுடியவில்லை என்றும் கூறியுள்ளார். மனுதாரர் செல்போன் மெக்கானிக்காக வளவனூரில் ஒரு கடையில் வேலை செய்து வந்ததாகக் குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். எனினும், வேலை, வருமானம் குறித்து ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே முன்தீர்ப்புகள் நெறிப்படியும், குறைந்தபட்ச ஊதிய சட்டத்தினை கருத்திற்கொண்டும் மனுதாரரின் வயதை கணக்கில்கொண்டு 2016-ல் மனுதாரரின் மாத வருமானம் ரூ.6000/- என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே விபத்தின்போது ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்த பட்சம் 6 மாதமாவது வேலைக்கு செல்லாமல் தொடர்

சிகிச்சையில் இருந்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதால் வருமான இழப்பிற்காக ரூ.36,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**24. ஊட்டச்சத்து**

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகபடியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.5,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**25. ஆடை சேத மதிப்பு**

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**26. போக்குவரத்து**

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லபட்ட வகையில் செலவு ஏற்பட்டதாக சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில்கொண்டு போக்குவரத்திற்காக ரூ.3,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**27. மருத்துவ பில்கள்**

மனுதாரர் புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ரூ.25,350/- செலவானதாக மருத்துவ ரசீதுகள் மனுதாரரால் ம.சா.ஆ.29ஆகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவ பில்களில் வரிசை எண் 9-ல் உள்ள ரூ.1000/-க்கான பில் முன்பணம் செலுத்தியதற்கான பில்தானே தவிர செலவு பில் அல்ல. எனவே மருத்துவ செலவு பில்லுக்கான தொகையாக ரூ.24,350/- மட்டும் மனுதாரர் பெற உரியவர் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**28. உதவியாளர் ஊதியம்**

மனுதாரர் சிகிச்சை பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**29. எதிர்கால சிகிச்சை செலவு :-**

மனுதாரருக்கு இடது கணுக்காலில் பொருத்தப்பட்டுள்ள திருகாணியை அகற்றவும், கணுக்காலில் ஏற்பட்டுள்ள வலி மற்றும் இறுக்கம் போக்க எலும்பு ஒட்டு அறுவை சிகிச்சை மற்றும் உட்கருவி அல்லது வெளிக்கருவி பொருத்தவும், மீண்டும் அகற்றவும் ரூ.20,000/- முதல் ரூ.30,000/- வரை செலவாகும் என மருத்துவர் அளித்த மதிப்பீட்டுச் சான்று ம.சா.ஆ.41-ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த முறை மனுதாரருக்கு உட்கருவி அகற்றப்பட்டபோது 9.11.2016 முதல் 15.11.2016 வரை ஏற்பட்ட செலவுகளுக்காக ரூ.3050/- அளவுக்கே ம.சா.ஆ.29-ல் செலவு ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டப் பொருண்மைகளை கருத்திற்கொண்டு

எதிர்கால சிகிச்சை செலவாக ரூ.10,000/- மட்டும் வழங்குவது ஏற்புடையதாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிரந்தர ஊனத்திற்கு | ரூ. 60,000 |
| மனவலி மற்றும் வேதனைக்காக | ரூ. 35,000 |
| ஊட்டச்சத்து | ரூ. 5,000 |
| ஆடை சேத மதிப்பு | ரூ. 1,000 |
| வருமான இழப்பு | ரூ. 36,000 |
| மருத்துவ பில்கள் | ரூ. 24,350 |
| போக்குவரத்து | ரூ. 3,000 |
| உதவியாளர் ஊதியம் | ரூ. 10,000 |
| எதிர்கால சிகிச்சை செலவு | ரூ. 10,000 |
| மொத்தம் | ரூ. 1,84,350/- |

விபத்திற்கு மனுதாரர்களின் 50% தற்கவனக்குறைவும் காரணம் என்பதால் மேற்கண்ட தொகையில் 50% மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மேற்கண்டவாறு மனுதாரருக்கு மொத்தம் ரூ.92,500/- (Rounded off Rs.92,175/-) (ரூபாய் தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) ஒட்டுமொத்த இழப்பீடாகக் கிடைக்கத்தக்கது என பிரச்சனை 4-க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.92,500/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)-மும் அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் விழுப்புரம் SBI வங்கியின் ADB கிளையில் (வங்கி IFS Code No. SBIN0003065 SWIFT) உள்ள, இந்நீதிமன்ற வங்கிக் கணக்கில் (A/C. No.36068985153) நேரடி வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என்றும், இழப்பீட்டுத் தொகையை செலுத்திய உடன் மனுதாரருக்கு/மனுதாரர் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு உரிய ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் வரையில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், மனுதாரர் மனு தாக்கல் செய்து அதில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில், நேரடியாக மனுதாரருடைய வங்கி கணக்கு மூலமாக NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் செலுத்திய நீதிமன்ற கட்டணத்தில் இழப்பீடு தொகைக்குரிய நீதிமன்றக்கட்டணம் போக அதிகமாக செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரருக்கு திருப்பி அளிக்க உத்தரவிடப்படுகிறது. வழக்குரைஞர் ஊதியம் ரூ.7930/-.

**<u>மனுதாரரின் வங்கி கணக்கு விவரங்கள் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரியுடன் | : | திரு.ஜோஸ்லின் கிருபாகரன் த/ பெ.சைலஸ், 280ஏ, மேற்கு பாண்டி ரோடு, வளவனூர், விழுப்புரம். |
| 2. | வங்கி மற்றும் வங்கி கிளையின் பெயர் | : | State Bank of India, Panampattu |
| 3. | மனுதாரரின் வங்கி கணக்கு எண் | : | 20390102938 |
| 4. | மனுதாரரின் வங்கி IFSC No. | : | SBIN0015985 |

மனுதாரருடைய வருமான வரி நிரந்தர கணக்கு எண் விவரங்களை மனுதாரர் இது நாள் வரை தாக்கல் செய்யாததால் அவற்றை உடனடியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**30. <u>பிரச்சனை 5-க்குரிய தீர்வு</u>**

MCOP.No.1/2017 மனுவின் மனுதாரர் எவ்வளவு இழப்பீடு பெற உரியவர்?

இம்மனுவின் மனுதாரான திரு.ராஜேஷ்குமார் விபத்து காயத்திற்காக தனக்கு ரூ.20,00,000/- இழப்பீடாக வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

(2). மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.4.2016 தேதியில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும், சிகிச்சைக்குச் சென்றபோது மனுதாரருக்கு வலது காலின் பின்பக்கத்தில் 3x4 செ.மீ. அளவில் ஒரு கன்றிய காயமும் பலவித சிராய்ப்பு காயங்களும் காணப்பட்டுள்ளது என்பதும், எலும்பு மருத்துவரின் கருத்துரைப்படி, கொடுங்காயம் எனச் சான்றளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.34 விபத்து பதிவேடு ஆவணத்திலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.4.2016 தேதி முதல் 16.4.2016 தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும் இடது கை பெரு விரலின் ஆரம்ப பகுதியில் எலும்பு முறிவு கண்டறியப்பட்டு பாரம்பரிய முறைப்படி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.35 விடுவிப்புச்சான்றிலிருந்து தெரியவருகிறது.

**(3).** தி ப்ரான்ச் மேனேஜர், டாடா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் பிரபு மற்றும் ஒருவர் (C.M.A.No.2380/15/2016(1) TN MAC 609) வழக்கில் மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைப் பின்பற்றி இந்நீதிமன்ற வேண்டுகோலின் பேரில் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் குழு மனுதாரரைப் பரிசோதித்து நீ.ம.சா.ஆ.3 ஊனச் சான்றிதழை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அந்த ஊனச்சான்றிதழில் மனுதாரருக்கு விபத்தில் இடது கை பெருவிரலில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக மொத்தம் 9% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு 9% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து கீழ்கண்டவாறு இழப்பீடு கணக்கிடப்படுகிறது.

**31. <u>ஊனத்திற்கான இழப்பீடு :-</u>**

தற்போதைய வாழ்க்கைச் செலவின அடிப்படையில் 1 சதவிகித ஊனத்திற்கு

ரூ.3000/- என நிர்ணயம் செய்வதே மிகவும் ஏற்க்கதக்க ஒன்றாக இருக்கும் என நேசனல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் **ஜி.ரமேஷ் மற்றும் ஒருவர்** (2013 (2) TN MAC 583) வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே மனுதாரருக்கு 2016 ஆம் ஆண்டில் 9% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரரின் காயங்கள் மற்றும் ஊனம், வயது ஆகியவற்றை கணக்கில்கொண்டு ஊனத்திற்கான இழப்பீட்டு தொகையை 1 சதவிகிதத்திற்கு ரூ.3,000/- என வழங்குவது சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானித்து 9x3,000=ரூ.27,000/- மனுதாரருக்கு நிரந்தர ஊனத்திற்காக கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

32. <u>மனவலி மற்றும் வேதனைக்காக</u>:-

மனுதாரருக்கு விபத்தில் இடது கை பெருவிரலில் எலும்பு முறிவும், காலில் கன்றிய காயமும், பலவித சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டு 3 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார். மேலும் 9% நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட மேற்படி காயங்களுக்காக அதிகபடியான மனவலியும், வேதனையும் ஏற்பட்டுள்ளதால் ரூ.10,000/- மனவலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**33. <u>வருமான இழப்பு</u>**

மனுதாரர் தனது சாட்சியத்தில் விபத்திற்கு முன்பு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.15,000/- வரை சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார். விபத்திற்கு பின்பு முன்போல் எந்த வேலையும் செய்யமுடியவில்லை என்றும் கூறியுள்ளார். ஆனால் வேலை வருமானம் குறித்து ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே முன்தீர்ப்புகள் நெறிப்படியும், குறைந்தபட்ச ஊதிய சட்டத்தினை கருத்திற்கொண்டும் மனுதாரரின் வயதை கணக்கில்கொண்டு 2016-ல் மனுதாரரின் மாத வருமானம் ரூ.6000/- என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே விபத்தின்போது ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்த பட்சம் 1 மாதமாவது வேலைக்கு செல்லாமல் தொடர் சிகிச்சையில் இருந்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதால் வருமான இழப்பிற்காக ரூ.6,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

**34. <u>ஊட்டச்சத்து</u>**

மனுதாரர் சிகிச்சையிலிருந்தபோதும், சிகிச்சைக்காக பின்னிட்டு விபத்து காயங்களை ஆற்றுவதற்காக அதிகபடியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளார். அந்த வகையில் அவர் ஊட்டச்சத்துணவு எடுத்துக்கொண்ட வகையில் அவருக்கு ஊட்டச்சத்துணவிற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**35. <u>ஆடை சேத மதிப்பு</u>**

மனுதாரருக்கு விபத்தின்போது அணிந்திருந்த ஆடை சேதத்திற்காக ரூ.1,000/- இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**36. <u>போக்குவரத்து</u>**

விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் போக்குவரத்து மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லபட்ட வகையில் சான்றாவணம் எதுவும் தாக்கல்

செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே விபத்து ஏற்பட்ட இடம், சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை ஆகியவற்றை கருத்தில்கொண்டு போக்குவரத்திற்காக ரூ.2,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

## 37. மருத்துவ பில்கள்

மனுதாரருக்கு மருந்து வாங்கியதற்காக செலவு ஏற்பட்டதாக மனுதாரரால் கூறப்பட்டிருந்தாலும் அதுகுறித்து எவ்வித மருந்து பில்களும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை எனவே மருந்து செலவிற்காக எவ்வித தொகையும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

## 38. உதவியாளர் ஊதியம்

மனுதாரர் சிகிச்சை பெற்ற காலங்களில் அவருடன் உதவிக்கு ஒருவர் இருந்து இருக்க கூடும். அவருக்கான செலவை மனுதாரர் மேற்கொண்டிருப்பார். எனவே மனுதாரருக்கு உதவியாளர் தொகையாக ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிரந்தர ஊனத்திற்கு | ரூ. 27,000 |
| மனவலி மற்றும் வேதனைக்காக | ரூ. 10,000 |
| ஊட்டச்சத்து | ரூ. 1,000 |
| ஆடை சேத மதிப்பு | ரூ. 1,000 |
| வருமான இழப்பு | ரூ. 6,000 |
| போக்குவரத்து | ரூ. 2,000 |
| உதவியாளர் ஊதியம் | ரூ. 1,000 |
| மொத்தம் | ரூ. 48,000/- |

விபத்திற்கு மனுதாரர்களின் 50% எதற்கவனக்குறைவும் காரணம் என்பதால் மேற்கண்ட தொகையில் 50% மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மேற்கண்ட தொகையில் மேற்படி மனுதாரருக்கு மொத்தம் ரூ.24,000/- (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்) ஒட்டு மொத்த நியாயமான இழப்பீடாக கிடைக்கத்தக்கது என பிரச்சனை பிரச்சனை 5-க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.24,000/- (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்)-மும் அதற்கு மனு தாக்கலான தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் விழுப்புரம் SBI வங்கியின் ADB கிளையில் (வங்கி IFS Code No. SBIN0003065 SWIFT) உள்ள, இந்நீதிமன்ற வங்கிக் கணக்கில் (A/C. No.36068985153) நேரடி வங்கி பண மாற்று முறையான NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் செலுத்தவேண்டும் என்றும், இழப்பீட்டுத் தொகையை செலுத்திய உடன் மனுதாரருக்கு/மனுதாரர் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு உரிய ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டுத் தொகையை, மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் வரையில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், மனுதாரர் மனு தாக்கல் செய்து அதில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில், நேரடியாக மனுதாரருடைய வங்கி கணக்கு மூலமாக NEFT அல்லது RTGS ஆகிய E-Transfer முறையில் பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் செலுத்திய நீதிமன்ற கட்டணத்தில் இழப்பீடு தொகைக்குரிய நீதிமன்றக்கட்டணம் போக அதிகமாக செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரருக்கு திருப்பி அளிக்க உத்தரவிடப்படுகிறது. வழக்குரைஞர் ஊதியம் ரூ.4000/-.

**<u>மனுதாரரின் வங்கி கணக்கு விவரங்கள் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரியுடன் | : | திரு.ராஜேஷ்குமார் த/பெ.கண்ணபிரான், 274எ, மேற்கு பாண்டி ரோடு, வளவனூர், விழுப்புரம். |
| 2. | வங்கி மற்றும் வங்கி கிளையின் பெயர் | : | State Bank of India, Panampattu |
| 3. | மனுதாரரின் வங்கி கணக்கு எண் | : | 20390102949 |
| 4. | மனுதாரரின் வங்கி IFSC No. | : | SBIN0015985 |

மனுதாரருடைய வருமான வரி நிரந்தர கணக்கு எண் விவரங்களை மனுதாரர் இது நாள் வரை தாக்கல் செய்யாததால் அவற்றை உடனடியாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை இன்று என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(S/d S.Uthamaraj)

சிறப்பு சார்பு நீதிபதி,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்)
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.-I, விழுப்புரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 .. திரு.மேத்யூ ராபின்சன்
ம.சா.2 .. திரு.ஜோஸ்லின் கிருபாகரன்
ம.சா.3 .. திரு.ராஜேஷ்குமார்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

ம.சா.ஆ.1 .. .. முதல் தகவல் அறிக்கை - உண்மை நகல்.
ம.சா.ஆ.2 .. .. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆர்.சி.புத்தகம் - உண்மை நகல்.
ம.சா.ஆ.3 .. .. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் - உண்மை நகல்.
ம.சா.ஆ.4 .. .. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - உண்மை நகல்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | .. | .. ஜெயராஜ் என்பவரின் ஓட்டுநர் உரிமம் - உண்மை நகல். |
| ம.சா.ஆ.6 | .. | .. மனுதாரர் மேத்யூ ராபின்சன் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - உண்மை நகல். |
| ம.சா.ஆ.7 | .. | .. மேத்யூ ராபின்சனின் ஓட்டுநர் உரிமம் - உண்மை நகல். |
| ம.சா.ஆ.8 | .. | .. விழுப்புரம் இ.எஸ்.மருத்துவமனையின் விடுவிப்புச் சான்றிதழ் - அசல். |
| ம.சா.ஆ.9 | .. | .. சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துமனையின் 26.5.2016 தேதிய விடுவிப்புச் சான்றிதழ் - அசல். |
| ம.சா.ஆ.10 | .. | .. சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துமனையின் 21.11.2016 தேதிய விடுவிப்புச் சான்றிதழ் - அசல். |
| ம.சா.ஆ.11 | .. | .. இ.எஸ் மருத்துவமனையின் ரூ.79,202-க்கான மருத்துவ செலவு பில் - அசல். |
| ம.சா.ஆ.12 | .. | .. ரூ.1,73,023-க்கான மருத்துவ செலவு பில் - உண்மை நகல். |
| ம.சா.ஆ.13 | .. | .. ரூ.1,42,668-க்கான மருத்துவ செலவு பில்கள் - அசல் மற்றும் நகல். |
| ம.சா.ஆ.14 | .. | .. ரூ.44,200-க்கான டிரிப் ஷீட்டுகள் 10 - அசல். |
| ம.சா.ஆ.15 | .. | .. நுண்கதிர் படம் (எண்ணிக்கை-5) - அசல். |
| ம.சா.ஆ.16 | .. | .. ஆதார் அட்டை (மேத்யூ ராபின்சன்) - உண்மை நகல். |
| ம.சா.ஆ.17 | .. | .. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல்பக்கம் - உண்மை நகல். (மேத்யூ ராபின்சன்). |
| ம.சா.ஆ.18 | .. | .. மேத்யூ ராபின்சன் என்பவரின் பணி நியமன ஆணை - அசல். |
| ம.சா.ஆ.19 | .. | .. மேத்யூ ராபின்சன் என்பவரின் மார்ச் 2016-க்கான சம்பள ரசீது - உண்மை நகல். |
| ம.சா.ஆ.20 | .. | .. மருத்துவ குழு முன்பு ஆஜராக மனுதாரருக்கு அளிக்கப்பட்ட கடிதம் - அசல். |
| ம.சா.ஆ.21 | .. | .. இறுதி அறிக்கை - உண்மை நகல். |
| ம.சா.ஆ.22 | .. | .. விபத்து பதிவேடு (மேத்யூ ராபின்சன்) - உண்மை நகல். |
| ம.சா.ஆ.23 | .. | .. மருத்துவ அலுவரால் வழங்கப்பட்ட மனுதாரரின் உடற்தகுதி சான்றிதழ் - ஒளி நகல். |
| ம.சா.ஆ.24 | .. | .. எதிர்கால மருத்துவ செலவினங்களுக்கான 4.2.2017 தேதிய கடிதம் - அசல். |
| ம.சா.ஆ.25 | .. | .. நுண்கதிர் படம் 6 (மேத்யூ ராபின்சன்) - அசல். |
| ம.சா.ஆ.26 | .. | .. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் 22.4.2016 தேதிய விடுவிப்புச் சான்றிதழ் - அசல். |
| ம.சா.ஆ.27 | .. | .. பாண்டிச்சேரி ஸ்ரீ மணக்குள வினாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் 7.6.2016 தேதிய விடுவிப்புச்சான்றிதழ் - உண்மை நகல். |
| ம.சா.ஆ.28 | .. | .. பாண்டிச்சேரி ஸ்ரீ மணக்குள வினாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் 15.11.2016 தேதிய விடுவிப்புச்சான்றிதழ் - அசல் |
| ம.சா.ஆ.29 | .. | .. ரூ.25,350-க்கான மருத்துவ செலவு பில்கள் - அசல். |
| ம.சா.ஆ.30 | .. | .. நுண்கதிர் படம் 3 (ஜோஸ்லின் கிருபாகரன்) - அசல். |

ம.சா.ஆ.31 .. .. விபத்து பதிவேடு (ஜோஸ்லின் கிருபாகரன்) - உண்மை நகல்.
ம.சா.ஆ.32 .. .. மனுதாரரின் ஆதார் அட்டை (ஜோஸ்லின் கிருபாகரன்) - உண்மை நகல்.
ம.சா.ஆ.33 .. .. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல்பக்கம் - ஒளி நகல். (ஜோஸ்லின் கிருபாகரன்).
ம.சா.ஆ.34 .. .. விபத்து பதிவேடு (ராஜேஷ்குமார்) - உண்மை நகல்.
ம.சா.ஆ.35 .. .. விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் 16.4.2016 தேதிய விடுவிப்புச் சான்றிதழ் - அசல்.
ம.சா.ஆ.36 .. .. மனுதாரரின் ஆதார் அட்டை (ராஜேஷ்குமார்) - உண்மை நகல்.
ம.சா.ஆ.37 .. .. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல்பக்கம் - உண்மை நகல். (ராஜேஷ்குமார்).
ம.சா.ஆ.38 .. .. மருத்துவ சிகிச்சை ஆவணம் - அசல் மற்றும் கார்பன் நகல்.
ம.சா.ஆ.39 .. .. நுண்கதிர் படம் 3 (மேத்யூ ராபின்சன்) - அசல்.
ம.சா.ஆ.40 .. .. எதிர்கால மருத்துவ செலவினங்களுக்கான 16.12.2017 தேதிய கடிதம் - அசல். (மேத்யூ ராபின்சன்)
ம.சா.ஆ.41 .. .. எதிர்கால மருத்துவ சிகிச்சை செலவினங்கள் குறித்த 13.3.2018 தேதிய கடிதம் (ஜோஸ்லின் கிருபாகரன்) - அசல்.
ம.சா.ஆ.42 .. .. நுண்கதிர் படம் 1 (ஜோஸ்லின் கிருபாகரன்) - அசல்.
ம.சா.ஆ.43 .. .. மேத்யூ ராபின்சன் பயிற்சி நீக்க ஆணை - ஒளி நகல்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

எ.ம.சா.1 .. திரு.ஜெயபாலன்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

.. இல்லை ..

**<u>நீதிமன்றசான்றாவணம்:-</u>**

நீ.ம.சா.ஆ.1 - அரசு மருத்துவர் குழு மனுதாரர் மேத்யூ ராபின்சனுக்கு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை - அசல்.
நீ.ம.சா.ஆ.2 - அரசு மருத்துவர் குழு மனுதாரர் ஜோஸ்லின் கிருபாகரனுக்கு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை - அசல்.
நீ.ம.சா.ஆ.3 - அரசு மருத்துவர் குழு மனுதாரர் ராஜேஷ்குமாருக்கு வழங்கிய ஊனச்சான்றிதழ்/அறிக்கை - அசல்.

(S/d S.Uthamaraj)

சிறப்பு சார்பு நீதிபதி,
(மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை வழக்குகள்)
சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.-I, விழுப்புரம்.